★ விலை ரூபா 1-00

# ஈழநாடு

THE EELANADU

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர் 25 வைகாசி 16 ஷப 16 இதழ் 108

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 30—5—83

## நிதிஉதவி

(யாழ்ப்பாணம்)

சந்தர்மடத்தில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிதிஉதவி வழங்க யாழ் ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் டாக்டர்கள், (...). உத்தியோகத்தர்கள், (...) ழியர்களும் நிதிசேகரித்து வருகிறார்கள்.

இதுவரை சுமார் 25 ஆயிரம் ரூபா நிவாரண நிதியாகச் சேர்ந்துள்ளதாக யாழ். ஆஸ்பத்திரி வட்டாரங்களிலிருந்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

0 0 0

சந்தர்மடத்தில் இடம்பெற்ற வன்செயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நெடுந்தீவு மக்கள் 1138 ரூபா நிதியாகச் சேர்த்து யாழ். பல்கலைக்கழக அகதிகள் புனர்வாழ்வு நிதியத்திடம் கையளித்துள்ளனர். (மா)

## கிளிநொச்சியில்
# பால் பதனிடும் தொழிற்சாலை
### அமைச்சர் தொண்டமான் இன்று திறந்துவைப்பார்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சியில் அமைக்கப்பட்ட பால்பதனிடும்தொழிற்சாலையை கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் இன்று காலை திறந்துவைக்கவுள்ளார்.

இத்தொழிற்சாலை பின்லாந்து அரசாங்கத்தின் ஒரு கோடி ரூபா உதவியுடன் அமைக்கப்பட்டுள்ளது.

இங்கு சுத்திகரிக்கப்படும் பால் பொலித்தீன் பைகளில் அடைக்கப்படும்.

கிளிநொச்சி, காலி ஆகிய இடங்களிலேயே முதன்முதலாக பிரசந்நிய ரீதியாக பால் பதனிடும் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இத்திட்டம் ஏனைய இடங்களுக்கும் படிப்படியாக விஸ்தரிக்கப்படவுள்ளது. (வெ)

# பேராதனைப் பல்கலைக்கழகம் தமிழ் மாணவருக்கு பாதுகாப்பு!

## விசேட வகுப்புகள் நடத்தவும் ஏற்பாடு
### பரீட்சை ஒத்திவைக்கப்படுமா?

(பேராதனை)

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் மாணவர்கள் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறிய ஆயிரத்து ஐநூறு தமிழ் மாணவர்களும்,மாணவிகளும் இப்பொழுது திரும்பிக் கொண்டிருக்கும் அதே நேரத்தில்; தமிழ் மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், அசம்பாவித சம்பவங்கள் மேலும் தலைதூக்காத வகையிலும், பேராதனைப் பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இம்மாதம் பதினொராம் திகதி இரவு பேராதனைப் பல்கலைக்கழக தமிழ் மாணவர்கள் சிங்கள மாணவர்களினால் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து பல்கலைக்கழகத்தில் பயிலும் ஆயிரத்துஐநூறு தமிழ்மாணவ மாணவிகளும் பல்கலைக்கழகத்திலிருந்து வீடு திரும்பியதும் தெரிந்ததே.

தமிழ் மாணவர்களுக்கு போதுமான பாதுகாப்பு வழங்கப்படும் என்று அளிக்கப்பட்ட உறுதி மொழியைத் தொடர்ந்து இப்பொழுது தமிழ் மாணவ, மாணவிகள் திரும்புகின்றனர்.

### பாதுகாப்பு-கண்காணிப்புக் குழுக்கள்

தமிழ் மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த பாதுகாப்புக் குழுக்களும், கண்காணிப்புக்குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு விடுதிக்கும் இக்குழுக்கள் பொறுப்பாக இருக்கும் என்றும், பாதுகாப்புக் குழுக்களில் பேராதனைப் பல்கலைக்கழக பாதுகாப்பு உத்தியோகத்தர்களுடன்பேராதனைப் பொலிஸாரும் சேர்ந்து பணியாற்றுவார்கள் என்றும் பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

தமிழ்மாணவர்கள் தவறவிட்ட வகுப்புகளை ஈடுசெய்யும் வகையில் விசேட வகுப்புகளை நடத்தவும் பல்கலைக்கழகநிர்வாகம் தீர்மானித்துள்ளது.

இதேநேரத்தில் பரீட்சையும் ஒத்திவைக்கப்படலாம் என்று தெரியவருகிறது.

## வல்வெட்டித்துறை
# பொலிஸ்நிலையம்
### வல்லைவெளிக்கு மாற்றம்

(கரவெட்டி)

வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையம் வல்லைவெளிக்கு இடம்மாறவுள்ளது

தற்போது வல்வெட்டித்துறையில் தனியார் கட்டிடம் ஒன்றில் அமைந்திருக்கும் இப்பொலிஸ்நிலையம் வல்லைவெளியிலுள்ள உடுப்பிட்டி கூட்டுறவு வைத்தியசாலை இயங்கிய கட்டிடத்தில் அமையவுள்ளது

அடுத்த இரண்டு மாதத்துக்குள் பொலிஸ் நிலையத்தை மாறுவதற்கான நடவடிக்கைகளை உடன் மேற்கொள்ளும்படி வல்வெட்டித்துறை பொலிஸ் பொறுப்பதிகாரியை மேலிடம் பணித்துள்ளதாகத் தெரியவருகிறது. (ஏ)

## ரூ. 14 லட்சம் கொள்ளை: தந்தை, மகன் கைது!

சென்னை, மே. 29

கர்நாடக மாநிலத்திலுள்ள வங்கி ஒன்றில் 14லட்சம் ரூபா களவாடப்பட்டது தொடர்பாகவும், வங்கி ஊழியரொருவர் கொலைசெய்யப்பட்டது தொடர்பாகவும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர், இவர்களிருவரும் தந்தையும். மகனுமாவார்

களவாடப்பட்ட 14லட்சம் ரூபாவில் 12லட்சம் ரூபா மீட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட தந்தையும், மகனும் வங்கி ஊழியர்களென்றும் கூறப்பட்டது. (வெ)

## தென்மாநில முதலமைச்சர் மகாநாடு

சென்னை மே 29

தென்மாநில முதலமைச்சர்களின் மகாநாடு எதிர்வரும் சனிக்கிழமை பாண்டிச்சேரியில் நடைபெறவுள்ளதாக அம்மாநில முதலமைச்சர் திரு. ரி. ராமச்சந்திரன் தெரிவித்தார். (வெ)

## "10 நிமிடம்வரை வெடிச்சத்தம் கேட்டது; நான் ஒருவரையும் காணவில்லை"
### ராணுவகோப்ரல் மரணவிசாரணையில் பொலிஸ் கான்ஸ்டபிள்

(யாழ்ப்பாணம்)

'பாடசாலையின் முன்பக்கம் வந்தபொழுது, மேற்குப்புற மாகக் கடமையிலிருந்த இராணுவவீரர் இரத்தக் காயத்துடன், மூலை வெளியில்வந்த நிலையில் வேலிக்கருகில் இறந்து கிடக்கக் கண்டேன். அந்நேரம் அவர் கையில் வைத்திருந்த துப்பாக்கியைக் காணவில்லை'' என்று கந்தர்மடம் வாக்குச் சாவடியில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் மரணமான இராணுவ கோப்ரல் ஜெயவர்த்தனவின் மரண விசாரணையில் யாழ். பொலிஸ் கான்ஸ்டபிள் அற்றம்பலம் தவராசா (34 வயது) சாட்சியமளிக்கையில் தெரிவித்தார்

பதில் நீதவான் எஸ் எஸ் பிரான்ஸிஸ் முன்னிலையில் யாழ். ஆஸ்பத்திரி பொலிஸ் விசாரணைப் பகுதியில் நேற்று முன்தினம் மரணவிசாரணை நடைபெற்றது

கடந்த 18-ம் திகதி யாழ். மாநகரசபைக்கான தேர்தலில் கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலை வாக்களிப்பு நிலையத்தில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் இராணுவவீரர் ஒருவர் மரணமானதும் மற்றும் ஒரு இராணுவ வீரர், இரு பொலிஸ் கான்ஸ்டபிள்கள் காயமடைந்ததும் தெரிந்ததே.

பொலிஸ் கான்ஸ்டபிள் தவராசா மேலும் சாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது:

'17-ம் திகதி யாழ். பொலிசைசேர்ந்த அப்பாஸ் என்ற பொலிஸ் கான்ஸ்டபிளுடன் பொலிஸ் பொறுப்பதிகாரியின் கட்டளைப்படி தேர்தல்கடமைக்கு யாழ் கச்சேரிக்கு சென்றோம்,

'கந்தர்மடம் வாக்குச் சாவடி பொறுப்பதிகாரியுடன் இ. போ. ச. பஸ் ஒன்றில் கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரிக்கு பிற்பகல் 4-30 மணியளவில் சென்றோம். அன்றிரவு 5-30-க்கும் சுமார் 6-30 மணிக்குமிடையில் தகுந்த பாதுகாப்புடன் பெட்டிகளையும் கொண்டு தலைமை உத்தியோகத்தருடன்சம்பவம் நடந்த இடத்துக்கு சென்றோம். அன்றிரவு 7 மணிக்கு ஒத்திகை பார்த்துவிட்டு திரும்பவும் தொழில் நுட்பக்கல்லூரிக்கு திரும்பினோம்.

'18-ம் திகதி காலை 6 மணியளவில் மேலும் 3 பொலிசாரும் 5 இராணுவ வீரர்களும்

(6-ம் பக்கம் பார்க்க)

## தமிழ் மாணவர்கள் விடுதிகளுக்குத் திரும்பினர்
### மாணவிகள் நாளை திரும்புவர்?

(யாழ்ப்பாணம்)

பேராதனைப் பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறிய தமிழ் மாணவர்களில் கொழும்பு, மட்டக்களப்பு பகுதியைச் சேர்ந்தவர்கள் நேற்று பல்கலைக்கழக விடுதிகளுக்குச் சென்றதாக நடவடிக்கைக் குழு உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்,

பல்கலைக்கழகத்தைச்சேர்ந்த தமிழ் மாணவிகளை நாளை அல்லது மறுதினம் (செவ்வாயும், புதனும்) வகுப்புகளுக்குத் திரும்பும்படி நடவடிக்கைக் குழு உறுப்பினர் கேட்டுக் கொண்டுள்ளார்.

முன்னர் ஜூன் 5ம் திகதி மட்டில் மாணவிகள் பல்கலைக்கழகத்துக்குச் செல்லவேண்டுமெனத் தெரிவித்திருந்தபோதிலும் பேராதனை, கொழும்பு மொறட்டுவ பல்கலைக் கழகங்களின் மாணவர் அவைத் தலைவர்கள் நேற்று முன் தினம் தமிழ் மாணவர் நடவடிக்கைக் குழுவைச் சந்தித்து, 'தமிழ் மாணவர்களுக்குத் தகுந்த பாதுகாப்பளிப்போம்' என்று உறுதியளித்ததைத் தொடர்ந்து தமிழ் மாணவர்கள் வகுப்புகளுக்குத் திரும்புவதில் மேற்படி மாற்றங்கள் இப்பொழுது செய்யப்பட்டுள்ளது. இதற்கான முயற்சிகளில் யாழ். பல்கலைக்கழக மாணவர் அவைத் தலைவர் திரு. சு ஸ்ரீஸ்கந்தராசா மேற்கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (மா)

# ஈழ விளம்பரம்

## விற்பனைக்கு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் 8 பரப்பு, 1½ பரப்புக்காணிகளும், செல்-ஜேனன் பொஸ்கோ அண்மையில் மருதடி ஒழுங்கையில் 2½ பரப்புக் காணியும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: கனகசபை, 7, குமாரசாமி வீதி, கந்தர் மடம், யாழ்ப்பாணம். 7395

மிற்சுபிசி டெலிகா T 120 79 மொடல் L 300 80/81 தற்போது இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. வித்தியா மோட்டோர்ஸ், 70 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23255 (7386)

## கல்வி

பொறியியல் கல்வி நிலையம் (Engineering Education Centre) யாழ். நகரில் பஸ் நிலையத்திற்கு சமீபமாக வகுப்புக்கள் நடத்துகிறது. வயரிங் வகுப்புக்கள் ஆரம்பமாகிறது. வயரிங் கல்வி இலவசம். விரிவுரையாளர் S C. இம்மானுவேல் B sc (Cey). Engineer Specialist in Electrical Machines உடன் தொடர்பு கொள்க. நிர்வாகி, யாழ்ப்பாண கல்வி நிலையம், சாந்தி தியேட்டர் அருகாமை யாழ்ப்பாணம். 7362

## பயிற்சி

மோட்டார் மெக்கானிக், வெல்டிங், கடைச்சல் [லேத்] வயரிங் பயிற்சிகள் 01-06-83 ஆரம்பமாகின்றன. இன்ஸ்ரிரியூட் ஒவ் எஞ்ஜினியரிங் ரெக்னொலொஜி 11B மொமர்சாக் கட்டிடம் ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம். 7337

## தேவை

பாதுகாவலர்கள் தேவை. ஓய்வு பெற்றவர்களும் வரலாம். 31-5-83, 1-6-83 திகதிகளில் காலை 10 மணிக்கும் 11 மணிக்குமிடையில் நற்சாட்சிப் பத்திரங்களுடன் தெல்லிப்பழை சந்திக்கருகிலுள்ள மோகன்ஸ் பாத அணிக் கடைக்கு நேரில் வரவும். 7393

## "கந்தர்மடம் சம்பவம் தமிழீழத்தை உறுதிப்படுத்தியுள்ளது

(யாழ்ப்பாணம்)

கந்தர்மடத்தில் இடம்பெற்ற வன்முறைச்சம்பவங்களைக் கண்டித்து தமிழ் இளைஞர் பேரவையினரும் தமிழ் மாணவர் பேரவையினரும் காங்கேசன்துறை நிர்வாகச் செயலாளர் திரு. சி உதயகுமார் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

அண்மைக்காலத்தில் இராணுவத்தினர் தமிழ் மக்கள் மீது நடாத்திய தாக்குதல்கள் அட்டூழியங்கள் தமிழினம் சுதந்திரமாக வாழ தமிழீழம் தான் தீர்வு என்பதை உறுதிப்படுத்தியுள்ளது" என்று அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

காங்கேசன்துறை தொகுதியில் மேற்படி பேரவையினர் கந்தர்மடத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரண உதவி வழங்க நிதி உடுபிடவைகள் ஆகியனவும் சேகரித்து வருவதாகவும் நிர்வாகச்செயலாளர் அறிவித்துள்ளார். (ஊ)

## உச்சில் கிராமத்தவர் உதவி

(கரவெட்டி)

கந்தர் மடத்தில் இடம் பெற்ற வன்முறைச் சம்பவங்களால் அகதிகளாக்கப்பட்ட குடும்பங்களுக்கு கரவெட்டி மேற்கு உச்சில் கிராமமுன்னேற்றச் சங்கம் நிதியும், பொருட்களும் சேகரித்து வழங்கியுள்ளது.

மேலும் கி. மு. சங்கத்தின் கீழ் இயங்கும் மாதர் சங்கம், இளைஞர் மன்ற உறுப்பினர்களே நிவாரண நிதி சேகரிப்பில் ஈடுபட்டவர்களாவர். [ஊ]

## கட்டிடத் தொழில் நுட்பவியல் நிறுவனம்

136, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

### ஆரம்பமாகிவிட்டது!

### C. E. I. PART I AND CITY & GUILDS (Lond.)

1. திரு. மேர்வின் கொன்ஸ்ரன்ரைன் B Sc. (Eng.) Production
2. திரு. P. J. S. பிள்ளை B. Sc. (Eng) Mech.
3. திரு. S. பத்மமோகன் B. Sc. (Eng.) Mech.
4. அன்ரன் ராஜசெல்வன் B. Sc. (Eng) Elec.
5. திரு. சிவகணேசன் B. Sc. (Cey)

வகுப்புக்கள் திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாட்களில் மாலை 4-30 முதல் 6-30 வரை நடைபெறும்,

பதிவு செய்தல்

கிழமை நாட்கள்:- 4-30 — 6-00 மாலை
சனி, ஞாயிறு:- காலை 9 — மாலை 6 வரை

(7394)

## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்

## அறிவித்தல்

மேற்படி கோவில் வழிபடுநர் மகாசபை உறுப்பினராகத் தம்மைப்பதிவு செய்துகொள்ள விரும்பும் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குள் வதிபவரும் இருபத்தொரு வயதுக்கு மேற்பட்டவரும், ஒழுக்கக்கேடு சம்பந்தப்பட்ட ஏதேனும் குற்றத்துக்காக நீதிமன்றமெதிலும் தண்டிக்கப்படாதவருமான சைவ சமயத்தவரான ஆண் எவரும், கீழ்வரும் படிவத்தில் தயாரிக்கப்பட்ட தமது விண்ணப்பத்துடன் ரூபா பத்துக்குரியதும் "பொருளாளர், நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு" என்ற பெயருக்கு எழுதப்பட்டதுமான தபாற் கட்டளையையும் இணைத்து 30-6-83க்கு முன் கிடைக்கத்தக்கதாக எனக்கு அனுப்பி விண்ணப்பித்துக்கொள்ளலாம்.

நா. சிவராசசிங்கம்
செயலாளர்
அறங்காவலர் சபை.

### மாதிரிப் படிவம்

1 முழுப்பெயர்; ..............................
..............................
2. தபால் விலாசம்: ..............................
..............................
3 சமயம்: ..............................
4 பிறந்த தேதி; ..............................


மேற்காணும் விபரங்கள் யாவும் உண்மையானவையெனவும், நான் ஒழுக்கக்கேடு சம்பந்தப்பட்ட குற்றமெதற்கும் நீதிமன்றமெதிலும் தண்டிக்கப்படவில்லையெனவும் உறுதி கூறுகிறேன்.

5 விண்ணப்பத்தாரர் ஒப்பம்: ..............................
..............................

குறிப்பு: 1 விண்ணப்பப்படிவங்களை விண்ணப்பதாரிகள் சொந்தமாக தயார் செய்துகொள்ள வேண்டும்.

2. விண்ணப்பங்கள் கோவில் அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள பெட்டியில் போடப்படவேண்டும். அல்லது பதிவுத் தபாலில் அனுப்பப்படவேண்டும். பதிவுத் தபாலில் அனுப்பப்படும் விணப்பத்தைக் கொண்ட உறையின் இடதுபக்கமேல் மூலையில் "வழிபடுநர் மகாசபை-உறுப்புரிமை விண்ணப்பம்" என எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

7389



சென்னை-ரூபவாகினி நிகழ்ச்சிகளைத் தெளிவாக கண்டு களிக்க தொலைக்காட்சி ஏரியல் அமைப்பதற்கு....

வீனஸ் நியூவீனஸ்

ரி.வி., ரேடியோ உத்தரவாதத்துடன் மணிக்கூடுகளை பழுதுபார்த்துக் கொள்ளவும்

புதிய ரி.வி, ரேடியோ, மணிக்கூடுகளை வாங்கிக்கொள்ளவும்

விரும்பிய பாடல்களை பதிவு செய்துகொள்ளவும்

மற்றும் மங்களவைபவங்களை வீடியோவில் படம்பிடித்துக் கொள்ளவும்

மேலும் யாழ் நகரில் உத்தரவாதத்துடன் ரி.வி ஏரியல் பொருத்திக்கொள்ள

வீனஸ் 266/1, ஸ்ரான்லி வீதி ஸ்ரீதர் தியேட்டர் அருகில் யாழ்ப்பாணம்

நியூ வீனஸ் 79/1 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

யாழ். மாவட்ட வடிசாலைகள் விற்பனவுக் கூட்டுறவுச் சமாசம்

## வெற்றிடங்கள்

1. வடிசாலை முகாமையாளர் பதவி (01)

**தகைமை:**

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழமொன்றில் இயற்கை விஞ்ஞானப் பட்டதாரியாகவோ அல்லது பொறியியல் பட்டதாரியாகவோ இருப்பதுடன் 25—40 வயதுக்கிடைப்பட்டவராகவும் ஆகக்குறைந்தது 5வருடமாவது சம்பந்தப்பட்ட துறைகளில் நிறைவேற்று அனுபவமுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

அல்லது

க. பொ. த. (உ. த.) பரீட்சையில் விஞ்ஞான பாடங்கள் நான்கில் ஒரே தடவையில் சித்தி பெற்றிருப்பதுடன் பொறுப்புள்ள நிறுவனமொன்றில் 10 வருட அனுபவம் பெற்றிருப்பதுடன் அதில் 3 வருட நிறைவேற்று அனுபவமுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

வடிசாலைக் கைத்தொழிலில் அறிவும் அனுபவமும் உடையவர்களுக்கு முதலிடம் வழங்கப்படும்.

**சம்பளம்:**

1100/- 50/- 60/- 1400/- சம்பளம் தகைமையடிப்படையில் நிர்ணயிக்கப்படும்.

2. வடிகலன் இயக்குநர் பதவிகள் (02)

**தகைமை:**

க பொ. த. [சாதாரணம்] விஞ்ஞானபாடங்களில் சித்தியெய்தியிருப்பதுடன் 18—40 வயதுக்கிடைப்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

வடிசாலைக் கைத்தொழிலில் அறிவும் அனுபவமும் பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**சம்பளம்:**

300/- -10 5 15 10 -500/-

3. கொதிகலன் இயக்குநர் பதவிகள் (02)

**தகைமை:**

க. பொ. த. (சாதாரணம்) பரீட்சையில் ஆறு பாடங்களில் சித்தியெய்தியிருப்பதுடன் 18—40 வயதுக்குட்பட்டவராகவும் கொதிகலன் இயக்குவதில் 5 வருடகால அனுபவமுடையவராகவோ அல்லது 8ந் தர சித்தியுடன் கொதிகலன் இயக்குவதில் 10 வருடகால அனுபவமுடையவராகவோ இருத்தல் வேண்டும்.

**சம்பளம்:**

300/- 10 5 15 10- 500/-

விண்ணப்பம் முடிவடையும் திகதி 1983ம் ஆண்டு ஜூன் மாதம் 15ம் திகதி.

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி;

செயலாளர்,
திட்டமிடல் உத்தியோகத்தர்,
யாழ்.மாவட்ட வடிசாலைகள் விற்பனவு
கூட்டுறவுச் சங்கம்,
திட்டமிடல் பகுதி, கச்சேரி,
யாழ்ப்பாணம்.

தலைவர்,
யாழ் மாவட்ட வடிசாலைகள் விற்பனவு
கூட்டுறவு சங்க சமாசம்.
(7390)

25-5-83

### மணிவாக்கு

அறம் தன்னந்தனியே வாழ்வதில்லை; அதற்கு அயலவர் உண்டு; அவர்களின் சகவாசம் அவசியமானது.

— ரஷ்ய பழமொழி

## நமது நோக்கு

### திரு. நடேசனும் நாடும்

ஆங்கில தத்துவமேதை பேற்ராண்ட்ரசல் ஒருமுறை தம்முடைய இரு குழந்தைகளுடன் உலாவந்து சென்றிருந்த கதை சொல்கிறார்.

ஐந்து வயதடைந்த தம்முடைய பெண் குழந்தை அந்த நாட்டின் சாதாரண ஏழைக் கமக்காரப் பெண்ணுடன் அளவளாவ நேரிட்டது. குறுகிய காலத்தில் அன்பும் நட்பும் கொண்ட அப்பெண் தாங்கள் விட்டுப் பிரியும் நேரத்தில், குழந்தையை முத்தமிட்டு, "என்ன அருமையான அழகான குழந்தை! குறொம்வெலி (Cromwell)ன் தேசத்தவராயிருந்தாலும் பரவாயில்லை" என்று ஆசி கூறினாராம்.

வரலாற்றை நன்றாகப் புரியாத நிலையில் இங்கிலாந்து ஒரு கொடுமையான சர்வாதிகார ஆட்சிக்குப் பலியான நாடு என்பதே அப்பெண்ணின் விளக்கம்; இங்குள்ள இளங்கள் இந்த நிலையில் இன்று வாழ்கின்றன.

நாட்டின் வரலாற்றைத் திரித்து எழுதுவதாலே உண்டாகும் அனர்த்தங்கள் உலகின் பல பாகங்களிலும் இன்றும் நாம் காணமுடியும். அவை நிலவுவதாலும் நியாயம் பிறக்கவழியில்லை.

"எங்கள் நாட்டின் இன்றைய பரிதாப நிலைக்கு, பாடசாலைகளில் மாணவர் படிக்கும் தவறான தீங்கான பாடங்களே அடிப்படைக் காரணம்" என்று திட்டவட்டமாக விளக்கியிருக்கிறார் சட்ட நிபுணர் திரு. எஸ். நடேசன் கியூ. சீ.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடந்த பகிரங்கக் கூட்டமொன்றில் மனந்திறந்து பேசிய திரு. நடேசன், யாழ்ப்பாணத்தின் இன்றைய பதற்ற நிலையை நேரில் கண்டிருக்கும் வாய்ப்புப் பெற்றவர்.

இளமைப் பருவத்தில் நாட்டின் சுதந்திரத்தில் தாக்கம் கொண்டு கண்ட கனவுகள் எல்லாம் தவிடு பொடியாகி விட்டனவென்ற மனஉடைவுடன் பேசிய பேச்சு அவருடைய பேச்சு

மனவுடைவுற்ற போதும் சட்டக்கலையை 50 வருடமாகப் பயிற்சி செய்த மனத்தெளிவும் அறிவு முதிர்ச்சியும் அவருடைய கருத்துக்களுக்கு ஒளியூட்டத்தவறவில்லை.

அந்த ஒளியின் விபரீதம் பேசிசைக் கேட்டோர்களுக்கு ஏமாற்றமளித்திருக்கலாம்.

"இரவோ காரிருள் நிறைந்திருக்கிறது. நானோ வீடு செல்வதற்கு அதிக தூரம் போகவேண்டும்" என்ற பிரபல ஆங்கில கீதத்தை நினைவூட்டும் பேச்சு திரு. நடேசனின் பேச்சு.

"பிணக்கும் போருமே எந்நாளும் இந்நாட்டின் துன்பங்கள்; இதற்கு விடிவு காணும் வழியில்லை என்று அழுங்கிய ரற்றும் திகைப்பு நற்செய்தி (Counsel of Despair)யே இன்றைய அரசியல் நிலை" என்கிறார் திரு. நடேசன்.

கோட்டிலும், நாட்டிலும் பல்லாண்டுகாலம் செனட் சபையிலும் வாதாடிய சர்வதேச புகழ்பெற்ற ஒரு மூதறிஞர் இதனைத்தவிர வேறு யாதும் 'நற்செய்தி' வழங்க முடியவில்லையே என்ற ஏமாற்றம் பலருக்கும் இருப்பது இயற்கை.

நாட்டின் கடந்தகால அரசியலை அதிகம் ஆராய்வது இன்று தேவைப்படும் பரிகாரத்துக்கு அதிகம் பயனளிக்காது. அது நிலைமையைமோசமாக்கின்றது.

நோய் நாடி, அதன்முதல் நாடி, நோய்தீர்க்கும் வாய் நாடி வாய்ப்பச்செய்தல், மருத்துவத்துறைக்கு மட்டுமே உரியதல்லவென்பது உண்மை: அதேசமயம் பல வைத்தியர்கள் சேர்ந்து இந்த நோயை முற்ற வைத்துவிட்டனரே என்ற பழிசுமத்தல் மருத்துவத் துறைகளுக்கு மட்டுமல்ல பிறதுறைகளுக்கும் போதிய பயனளிக்கும் கருத்தல்ல.

தமிழ் மக்களின் சுதந்திர இயக்கம் அன்று தொட்டு இன்று வரைக்கும் பல தோற்றங்களையும் நடைமுறைகளையும் கொண்டிருந்தது.

தேசிய ஒற்றுமை என்ற 'அரி ஓம் நம' தொடக்கம் ஐம்பதுக்கைம்பது, சமஷ்டி அரசு, மொழிச்சமத்துவம், தனிநாடு - ஈழம் என்ற கோஷங்களுக்கு மக்கள் காலத்துக்குக்காலம் ஆதரவளித்துவந்தனர்.

இவற்றை மக்கள் முன் வைத்த தலைவர்களுக்கு எதிர்ப்பிரசாரம் செய்தவர்கள் -இவர்களே மாறி மாறித் தலைமை தாங்கியது இக்கால வரலாறு.

ஆனால் இன்று என்றுமில்லாத ஒற்றுமை தமிழ் மக்கள் மத்தியில் காணப்படுவது மெய்; எனவே கொள்கைகள் அவற்றிலே ஏற்படுகின்ற கருத்து மாறுபாடுகள் வேறு; ஆனால் அந்தக் கொள்கைகள் பரவுவதற்காகத் தன்னலம் கருதாமல் தலைவர்கள் ஆற்றிய பணிகள் நாமறிந்தவை; அவைகளை மதிப்பது என்பது வேறு. அந்த மனப்போக்கு இன்று அவசியமானது.

அந்தவகையில் நாம் இன்றைய நிலைமையை நோக்கினால் உண்மை— நாமறிந்தவற்றுக்கு உண்மையெனப்படுவது உதயமாவதற்கு இன்னும் இடமுண்டு.

திரு. நடேசன் கூறியது போல் சிங்களமக்கள் தங்கள் தலைவர்களின் அதிகார வேட்கைக்குப் பலியாகி, அவர்களின் பிள்ளைகள் பாடசாலைகளில் படிக்கும் தவறான பாடங்களுக்குப் பலியாகி, தமிழர்கள் அனைவரும் தங்கள் பகைவரென்ற நம்பிக்கையில் ஊறிவிட்டனர்; இதனை நம்புவதற்கு சூழ்நிலையும் வாய்த்திருக்கிறது.

தமிழ்த் தலைவர்கள் தெரிந்தோ தெரியாமலோ இதற்கு தூபமிடத் தவறவில்லை இது எங்கள் தற்றையர்நாடுஎன்றுபாரதியார் போல இனிமையாகக் கூற முடியவில்லை விளைவு நெருக்கடியின் இன்றைய உச்சநிலை.

இதற்குத் தீர்வுகாணும் வழியில்லையென்று அஞ்சுவதற்கு ஆதாரமிருந்த போதும் அவ்வித விரக்தி ஆபத்தானது.

இவ்வாறு கூறுவதற்கு உங்களிடம் 'குளிகை' ஏதுவும் உண்டாவென்று முறியடிக்க முற்படுபவர்களுக்கு இன்று பஞ்சமில்லை.

இவ்வித விவேகமற்ற பேச்சுக்களாலும் செயல்களாலும் சொல்லுக்கும் செயலுக்குமுள்ள முரண்பாட்டாலும், நாம் நியாயம் உரைக்க முடியவில்லை. எங்கள் இளைஞர்களுக்குத் தலைமைதாங்கத் தவறிவிட்டோம்.

நியாயம் இல்லாதவிடத்தில் நீதி எதிர்பார்ப்பது எவ்வாறு?

எனவே திரு. நடேசன் குறிப்பிட்டிருக்கும் 'நஞ்சை' மிடற்றினில் அடக்குவதெந்த தெய்வம் யாது? என்பதே அடுத்த கேள்வி.

ராணுவம் அல்ல, பாராளுமன்றம் அல்ல; அங்கு நஞ்சு பெருகுகின்றது; கட்சி அரசு, அல்லது அதன் செல்வாக்கல்ல,

சகல சமூகங்களின் சான்றோர் - தேவர்கள் போல் வேண்டிய வரத்தை வேண்டிய முறையில் பெற நாட்டின் தலைவருக்கு தக்காறு உபதேசம் செய்ய முடியாதா?

# ஒரு நாட்டின் இலக்கியங்களே

## அந்த நாட்டுக்குப் பெருமை தருகிறது

### தமிழாராய்ச்சி மகாநாட்டில் தங்கம்மா அப்பாக்குட்டி

(நமது வவனியா நிருபர்)

முள்ளியவளை வித்தியானந்த கல்லூரியில் ஒன்றரை லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட கலை அரங்கு முல்லைத்தீவு உதவி அரசாங்க அதிபர் திரு வி. சிங்காரவேலுவினால் சம்பிரதாயமுறைப்படி திறந்து வைக்கப்பட்டது.

இக்கலையரங்கில் வன்னிப் பகுதி பிராந்திய தமிழாராய்ச்சி மகாநாட்டு முதல் நாள் கலைநிகழ்ச்சிகள் இடம் பெற்றது கலை அரங்கு திறப்புவிழாவுக்கு யாழ்ப்பாணம் சனிஷ்ட உயர்தர மகா வித்தியாலய அதிபர் திரு. ச. முத்தையா தலைமை வகித்தார். முள்ளியவளை நலன்புரிச்சங்கம் குறித்த கலையரங்கினை நிர்மாணித்தது குறிப்பிடத்தக்கது சுந்தரலிங்கம் அரங்கு என்று அரங்கிற்கு பெயர் சூட்டப்பட்டுள்ளது.

"கலை அரங்குகள் மூலமே எமது பாரம்பரிய கலாசார நிகழ்ச்சிகளையும் பண்பாடுகளையும் வளர்க்க முடியும் என்று உதவி அரசாங்க அதிபர் திரு. சிங்காரவேலு தனது உரையில் குறிப்பிட்டார்.

முல்லைத்தீவு கல்விப்பணிப்பாளர் திரு. முருகையா வட்டாரக்கல்வி அதிகாரி திரு நடராஜா ஆகியோரும் பேசினர்.

முள்ளியவளை நலன் புரிச்சங்க பிரதிநிதி திரு. எஸ். ஜெகதீஸ்வரன் நன்றி கூறினார்.

கலை அரங்கு திறப்பு விழாவின் பின்னர் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் சு. வித்தியானந்தன் தலைமையில் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. பிரதம அதிதியாக சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி கலந்து கொண்டார் இவர் தனது உரையில் கூறியதாவது!

"வன்னிப் பகுதி தமிழ் மக்கள், தமிழ் மொழியில் உள்ள பற்றையும், ஆர்வத்தையும் இம்மகாநாடுமூலம் காட்டிவிட்டார்கள்' எங்கும் தமிழ் மணம் வீசுகின்றவகையில் தமிழ்மொழியின் இலக்கியங்கள், பண்பாடு அறவாழ்வை உணர்ந்து கொள்ளவேண்டிய கடமை எல்லோருக்கும் உண்டு.

"ஒரு நாட்டுக்கு பெருமை அந்த நாட்டின் இலக்கியங்களும் நாட்டுக் கவிதைகளுமே ஆகும். இலக்கியங்கள் அழிந்து போனால் அவற்றை மீண்டும் பெறமுடியாது இலக்கியங்கள் பேணப்படவேண்டுமென்பதை வரலாறுகள் காட்டுகின்றது. எம்மவர்கள் இலக்கியங்களை படித்துப் போற்றி இன்புற வேண்டும்"

கலாநிதி சு. வித்தியானந்தன் கலை நிகழ்ச்சியின்போது உரையாற்றுகையில்: யாழ்ப்பாணத்திலுள்ள பாடசாலைகளோடு ஒப்பிடக்கூடிய நிலைக்கு முள்ளியவளை வித்தியானந்த கல்லூரி உயர்ந்துள்ளதை யிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன் என்றார்.

":பின்தங்கிய பிரேதேசமாக இருந்தபோது திறமை அடிப்படையில் இப்பாடசாலையில் படித்த மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்ல தகுதிபெற்று வருடா வருடம் பல்கலைக்கழகம் செல்வதையிட்டும் நான் பெருமகிழ்வடைகின்றேன்" என்றும் கூறினார்.

வன்னிப் பிராந்தியத் தமிழாராய்ச்சி மகாநாட்டு மலரை கலாநிதி வித்தியானந்தன் முல்லைத்தீவு அரச அதிபரும், மகாநாட்டு தலைவருமாகிய திரு. கே. கே. ஞானசந்திரனுக்கு வழங்கி மலர்வெளியீட்டை ஆரம்பித்துவைத்தார்.

## துர்க்காதேவி ஆலயப் பகுதியில் சுகாதாரத்தைப் பேண ஏற்பாடு

(மாவிட்டபுரம்)

தெல்லிப்பழை துர்க்கா தேவி ஆலயப்பகுதியில் சுற்றாடல் சுகாதாரத்தைப் பேணுவதற்கு காங்கேசன்துறை சுகாதார வைத்திய அதிகாரி நடவடிக்கை எடுத்துள்ளார்.

தெல்லிப்பழை துர்க்கா தேவி ஆலயத்தில் பல பகுதிகளிலிருந்தும் மக்கள் வந்து கூடுவதால் ஆலய சுற்றாடலின் சுகாதாரம் பாதுகாக்கப்படுவது அவசியமென்று கருதிய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆலய நிர்வாக சபையினரும், தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தினரும் கோரியதற்கிணங்க காங்கேசன்துறை சுகாதார வைத்திய அதிகாரி திரு. இ. தெய்வேந்திரன் இதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளார்

ஆலய சுற்றாடலில் சுகாதார வசதிகளை ஏற்படுத்தவும் ஆலய சுற்றாடலில் வதிபவர்கள் மலகூடங்கள் அமைக்காதுவிட்டிருந்தால் அவற்றை அமைத்துக்கொடுக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. அத்துடன் மேற்படி ஆலய அநாதைகள் ஆச்சிரமத்தில் தங்கியுள்ள அநாதைச்சிறுவர்களது சுகாதாரத்தைப் பேணவும், வைத்திய சிகிச்சைகளிக்கவும் திரு. தெய்வேந்திரன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

### யாழ். மாவட்ட

## பாவனையாளர்சங்க சமாஜம் அமைக்க ஏற்பாடு

(மாவிட்டபுரம்)

யாழ் மாவட்ட பாவனையாளர் சங்கங்களின் சமாஜம் ஒன்று விரைவில் அமைக்கப்பட உள்ளது.

யாழ். மாவட்டத்திக்கிராம

[6ம் பக்கம் பார்க்க]

## மக்கள் கருத்து

## யாழ்நகரில் உயிராபத்துக் கிடங்குகள்

24-05-83 அன்று 'ஈழநாடு' இதழில் வெளிவந்த உயிராபத்தை விளைவிக்கும் கிடங்குகள் என்ற விடயத்தை மாநகரசபை ஆணையாளரோ அல்லது வோக்கர்ஸ் நிறுவன முகாமையாளர் ஏ,என். கமலநாதனோ சரியாக வாசித்து விளங்கிக்கொள்ளவில்லைப் போல் உள்ளது. ஆணையாளர் ஏதோ உத்தியோக பூர்வமாக தொலைத் தொடர்புகள் திணைக்களப் பொறியியலாளருக்கும், பணிப்பாளருக்கும் தான் கடிதம் எழுதி அதற்குள் நடவடிக்கை மேற்கொள்ளாவிட்டால் மாநகர சபைக்குரிய வீதிகளில் கிடங்குகள் வெட்ட வாக்கர்ஸ் நிறுவனம் அனுமதிபெற்றதா? அவ்வாறு பெறப்படாவிட்டால் அவர்கள் இவ்வாறான கிடங்குகளை உண்டாக்குவதை சட்டமூலம் தடுத்து நிறுத்த ஆணையாளரோ அல்லது பெருந்தெருக்கள் திணைக்களப் பிரதம பொறியியலாளரோ நடவடிக்கை எடுத்தனரா?

வோக்கர்ஸ் நிறுவன முகாமையாளர் தந்தித் தொடர்புகளின் முக்கியத்துவத்தையும் இத்தொடர்புகள் இன்று அமைக்கப்பட இருக்கும் புதிய அமைப்பு முறையினால் தொடர்புகள் விரைவாகவும் இலேசாகவும் ஏற்படப் போனதாகவும் விளக்கம் கொடுத்துள்ளார். சாதாரி அறிவுள்ள யாழ்ப்பாண மக்களுக்கு இதுபற்றி பலநாட்களுக்கு முன்னரேயே தெரியும். ஆபத்து சமிக்ஞைபலகைகளை ஆங்காங்கே வைத்ததாக அவர் கூறுகின்றார். ஒரு சில இடங்கள் தவிர ஏனைய இடங்களில் ஆபத்துஅறிவிப்புபலகைகள் வைக்கப்படவில்லை. கடைசி சிகப்புக்கொடிகளையாவது கட்டியிருக்கலாம். சில இடங்களில் கிடங்குகளை அமைக்கும் போது நான் நேரில் கண்டேன். ஆபத்து அறிவிப்பு பலகைகள் வைக்கப்படவில்லை. சந்திகளில் கிடங்குகள் அமைக்கும்போது நான்கு பக்கமும் இவ்வாறான அறிவித்தல் பலகைகள் வைப்பது அவசியம். அவ்வாறு இரவில் சிகப்பு வெளிச்சம் வைக்கவேண்டும். அப்படி இல்லாவிடில் வெளிச்சம் பட்டவுடன் மினுங்கக்கூடிய அடையாளங்களையாவது வைத்திருக்கலாம் சட்டத்தையும் மக்கள் பாதுகாப்பையும் பேணுவதில் இவ்விடயத்தில் சம்பந்தப்பட்டவர்கள் அதிக அக்கறை எடுத்துக்கொள்ளவில்லை என்றே நான் கருதுகிறேன். இனியும் நேரத்தை வீணாக்காது ஏற்படுத்தப்பட்டுள்ள மரணப் பொறிக்கிடங்கு அருகில் ஆபத்து அறிவிப்பும் பலகைகளை வைப்பதிலும் கிடங்கள் மூடப்பட்டபின் அவற்றிற்குத் தார் போட்டு விடுவதிலும் சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள் என நம்புகின்றோம்.

த. விநாயகமூர்த்தி.
யாழ்ப்பாணம்.

# "3-ம் உலக நாடுகளின் பொருளாதாரப் பிரச்னைகள் முழுமையாக ஆராயப்படும்!"

## வில்லியம்ஸ் பேர்க் மாநாட்டில் றீகன்

### இந்திராவின் செய்திகுறித்தும் மகிழ்ச்சி!

நியுயோர்க், மே 29

"மூன்றாம் உலக வறிய நாடுகளின் பொருளாதார பிரச்சினைகள் வில்லியம்ஸ் பேர்க் மகாநாட்டில் முழுமையாக ஆராயப்படும். இத்துடன் கைத்தொழில் நாடுகள் வளர்முக நாடுகளுக்கு வழங்கும் உதவிகளின் நன்மை, தீமைகள் குறித்தும் பரிசீலிக்கப்படும்"

இவ்வாறு அமெரிக்க அதிபர் திரு. றொனால்ட் றீகன் அமெரிக்காவின் வேர்ஜினியா மாநிலத்தின் வில்லியம்ஸ் பேர்க் நகரில் ஆரம்பமான ஏழு கைத்தொழில் நாடுகளின் பொருளாதார மகாநாட்டில் தெரிவித்தார்.

திரு. றீகன், இம் மகாநாடு வெற்றிபெற பல உலகத் தலைவர்கள் வாழ்த்துக்கள் அனுப்பியதற்கு நன்றிதெரிவித்துக் கொண்டபோது, இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி தமக்கு அனுப்பிய செய்தி குறித்து விசேடமாகக் குறிப்பிட்டார்.

"மூன்றாம் உலக வறிய நாடுகளின் பொருளாதார இன்னல்களுக்கு வில்லியம்ஸ் பேர்க் மகாநாடு சிறந்த தீர்வுகளைக் காணவேண்டும்" என்று பிரதமர் திருமதி காந்தி அணிசேரா இயக்கம் சார்பில் தமது செய்தியில் தெரிவித்துள்ளதாக குறிப்பிட்ட றீகன், அவரது கோரிக்கைகள் பூரணமாக ஆராயப்படுமென்று தெரிவித்த திருமதி காந்தியின் செய்தி தமக்கு மகிழ்ச்சி தருவதொன்றாக இருக்கின்றதென்று கூறினார்.

திரு. றீகன் தொடர்ந்து பேசுகையில் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தி சர்வதேசவர்த்தகம், நிதிநிலைமை என்பவற்றை சீர்திருத்துவதன்மூலம் உலக பொருளாதாரத்தை ஸ்திரமடையச்செய்ய அமெரிக்கா பூரண ஒத்துழைப்பு வழங்கும் என்று கூறினார்.

'வில்லியம்ஸ் பேர்க்' மகாநாட்டில் கலந்துகொண்ட அமெரிக்கப் பிரதிநிதிகள் கருத்துத் தெரிவிக்கையில், மூன்றாம் உலக நாடுகளுக்கு கூடுதல் நிதியை அவற்றின் பொருளாதார வளர்ச்சி கருதி வழங்குவதைவிட சர்வதேச ரீதியில் வர்த்தக சலுகைகளை அவற்றுக்கு வழங்கவேண்டுமென்றும், இதன்மூலம் அவை சுயமாக முன்னேற ஒத்துழைப்பு வழங்கமுடியுமென்றும் தெரிவித்தனர்.

### கனடா பிரதமருடன் பேச்சு

இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி வில்லியம்ஸ் பேர்க் மகாநாடு ஆரம்பமாகு முன்னர் அம் மகாநாட்டில் கலந்துகொள்ளும் ஏழு நாடுகளில் ஒன்றான கனடாவின் பிரதமர் திரு. ட்ரூடோவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டார்.

அவரிடம் மூன்றாம் உலக மற்றும் அணிசேரா இயக்கத்தில் அங்கம்வகிக்கும் நாடுகளின் பொருளாதார பிரச்சினைகளை எடுத்துக்கூறியதுடன் புதுடில்லி அணிசேரா மாநாட்டில், அணிசேரா இயக்கம் எடுத்த பொருளியல் ரீதியான தீர்மானங்களையும் விளக்கி அவைபற்றி வில்லியம்ஸ்பேர்க்கில்' குறிப்பிடும்படி திருமதி காந்தி கேட்டுக்கொண்டார். (கி)

## இந்திய விமானப்படையிலும் விண்வெளி வீரர்கள்!

### இந்திய தளபதி பெருமை

புதுடில்லி, மே 29

"உலகில் சிறந்த விமானப் படைகளில் இருப்பதுபோன்று இந்திய விமானப்படையிலும் விண்வெளி வீரர்கள் விரைவில் இடம்பெறுவார்கள்" என்று இந்திய விமானப்படைத் தளபதி கூறினார்.

புதிதாக வெளியேறிய இந்திய விமானப்படை வீரர்கள் மத்தியில் உரையாற்றுகையிலேயே தளபதி இட்பார்சிங் மேற்கண்டவாறு கூறினார்.

இந்திய விமானப்படை வீரர்கள் உலகின் சிறந்த விமானப்படை வீரர்களுக்கு இணையானவர்களாக பணியாற்றவேண்டுமென்றும், நாட்டு நலனில் தீவிர பங்கேற்கவேண்டுமென்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இந்திய விமானப்படையைச் சேர்ந்த இரு விமானிகள் சோவியத்யூனியனில் விண்வெளி ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படும் 'ஸ்டார் நகரில்' அடுத்தாண்டு விண்வெளி செல்வதற்கான பயிற்சிகளில் ஈடுபட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்கள் சோவியத் விண்வெளி வீரர்களுடனேயே தமது பயணத்தை மேற்கொள்வர். (கி)

## "பிராந்தியக் கட்சிகளால் மத்திய அரசுக்கு பிரச்னைகள் இல்லை!"

— என் டி ராமராவ்

சென்னை, மே 29

"பிராந்தியக் கட்சிகளால் மத்திய அரசுக்கு எவ்வகையிலும் பிரச்சினைகள் தோன்றாது. நாட்டு ஐக்கியத்தையும் இக் கட்சிகளால் பராமரிக்கமுடியும்" என்று ஆந்திர மாநில முதலமைச்சர் திரு. என். டி. ராமராவ் தெரிவித்தார்.

ஆந்திராவில் விஜயவாடா நகரில் பதினான்கு எதிர்க் கட்சிகள் கலந்துகொண்ட மகாநாடொன்றிலேயே திரு ராமராவ் மேற்கண்டவாறு தெரிவித்தார். இம் மகாநாட்டிற்கு இவரே தலைமைதாங்கினார்.

"மத்திய அரசு மாநில அரசுகளின் விவகாரங்களில் தலையிட்டதனாலேயே நாட்டு ஒற்றுமைக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது" என்று திரு. ராமராவ் மேலும் கூறினார்.

மத்திய, மாநில பூசல்களை விசாரணைசெய்ய அமைக்கப்பட்டுள்ள சர்க்காரியா கமிஷனின் அதிகாரங்கள் குறித்து மத்திய அரசு எதிர்க்கட்சிகளுடன் ஆலோசிக்கவேண்டுமென்றும் இம் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது. (கி)

## இந்திய விஜயம்

புதுடில்லி மே 29

அமெரிக்க ராஜாங்க அமைச்சர் திரு. ஜோர்ஜ் ஷுல்ஸ் அடுத்தமாதம் இறுதிப் பகுதியில் இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்கிறார்.

தமது இந்தியவிஜயம் அமெரிக்க இந்திய உறவுகள் தொடர்ந்து வலுப்பெற வழிவகுக்கும் என்று திரு. ஷுல்ஸ் தெரிவித்துள்ளார். இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அமெரிக்கா விஜயம் செய்தபோது அங்கு நடத்திய பேச்சுக்களின் விளைவுகள் முன்னேற்றமடைந்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். (கி)


ஹோம் பிறின்ஸ் லிமிட்

யாழ். புடவை வியாபாரிகளுக்கு ஓர் வரப்பிரசாதம்

ஹோம் பிறின்ஸ் லிமிட், 82, கன்னாதிட்டி வீதியிலுள்ள ஹோம் பிறின்ஸ் ஸ்தாபனத்தில் பூகொடை ஆலை புடவை வகைகள் மொத்த விற்பனைக்கு உண்டு.

I. சாயமூட்டிய பொப்பிளின்
II. வெள்ளை பொப்பிளின்
III. பிறின்ரெட் பப்றிக்

விபரங்களுக்கு தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

ஹோம் பிறின்ஸ் லிமிட்
82, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம். (போன்: 24310)

தலைமைக் காரியாலயம்
ஹோம் பிறின்ஸ் லிமிட்
463, காலி வீதி, கொழும்பு-3



வெளிநாடு செல்கிறீர்களா?

உங்கள் விமான பயணச் சீட்டுக்களை எந்தவித சிரமமின்றி யாழ் நகரிலேயே பெற்றுக்கொள்ளுங்கள்.

விபரங்கட்கு:-

த பிறின்ஸ் கம்பனி லிமிட்டெட்
249, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 23680



உங்கள் குடும்பத்தினர் உணவை விரும்பிச் சுவைப்பதன் இரகசியம் அஜி-நொ-மோட்டோ!




உங்கள் சமையலை குடும்பத்திலுள்ள அனைவரும் ஆவலுடன் உண்ண வேண்டும் என்று விரும்புகிறீர்களா? இன்றே, அஜி-நொ-மோட்டோவின் துணையை நாடுங்கள். அஜி-நொ-மோட்டோ நீங்கள் சமைக்கும் உணவின் இயற்கைச் சுவையைப் பெருக்குகின்றது. கறி, சோறு, சம்பல், சூப் முதலிய எவ்வகை உணவிலும் சேர்க்கலாம். கரும்பு, பீட்றூட், மரவள்ளி ஆகியவற்றின் இயற்கை மாப்பொருளில் இருந்து, பெறப்படும் அஜி-நொ-மோட்டோவை 80 நாடுகளில் 100 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் பாவிக்கிறார்கள்.

சந்தைப்படுத்துவோர்: கேவ்ஸ் சந்தைப்படுத்தும் பிரிவு
விலை: ரூ.1/20 ல் இருந்து

味の素 அஜி-நொ-மோட்டோ®
உங்கள் உணவின் சுவையை அதிகரிக்கிறது.

Minds/AJM 0005

# இன்றைய பலன்

வைகாசி—16ம் திகதி

திங்கட்கிழமை

[30-5-83]

மேடம்— இலட்சியப் பாதையை நோக்கி இன்று பயணம் ஆரம்பமாகும் எதிர் பார்த்த பொருள் கிடைக்க லாம் பிள்ளைகளின் முன்னேற் றம் மகிழ்ச்சியைத் தேடித் தரும் நீண்டநாள் கனவு நனவாகும்.

இடபம்— ஏமாற்றத்தின் எதிரொலி பழிவாங்கும் உணர்ச்சியைத் தூண்டும் எதி லும் விரக்தி மனப்பான்மை தென்படும் வேண்டாத நடவ டிக்கையின்மூலம் நண்பர்களை பகைத்துக் கொள்ள நேரிடும்.

மிதுனம்— பிரிந்தவர்கள் வாழ்க்கையில் மீண்டும் இணை வர் குடும்பப் பிரச்னைகளில் சுமுகமான நிலை தென்படும் சாதிக்கக்கூடிய செல்வாக்கும் பெருகும் கற்றுடலிலும்வேண் டியதைச் சாதிப்பீர்கள்.

கடகம்— பணமுடையினால் பெரிதும் வேதனைப்படுவீர்கள் கடன்தொல்லைகளும் அதிகரிக் கும் நம்பியிருந்த இடத்திலி ருந்து ஏமாற்றமான செய்தி யும் கிடைக்கும் மனத்தளர்ச் சிக்கு இடங்கொடாது நடக்க வும்.

சிம்மம்— பிரயாணமூலம் மகிழ்ச்சி தரும் செய்தி ஒன்று கிடைக்கலாம் ஏழைகளிடத் தில் இரக்கம் காட்டுவீர்கள் பெரியவர்களின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும் பிறந்தகத்தின் அழைப்புக் கிடைக்கும்.

கன்னி— கடமையாற்று மிடத்தில் சிறப்பான இடம் கிடைக்கும் புதிய கண்டுபிடிப் புக்களில் ஊக்கம் ஏற்படும் டாக்டர்கள் போற்றப்படுவார் கள் தூரத்துச்செய்தி ஒன்று உற்சாகத்தைத் தரும்.

துலாம்— நிதிநிலைமையில் விரும்பத்தக்க முன்னேற்றம் காணப்படுகின்றது வணிகர் களாயின் அதிக ஆதாயத் தைப் பெறுவர் புதுமையான காரியங்களில் மனதைச் செலுத்துவீர்.

விருச்சிகம்— திருடர் பயத் திற்கு இடமுண்டு தனிவழிப் பயணத்தைத் தவிர்த்துக் கொள்ளவும் கடன் தொல்லை அதிகரிக்கலாம் குடும்பத்தில் குறை கேட்க நேரிடும் பெண் கள் மிகவும் அவதானம்வேண்டும்.

தனு— உள்ளத்தில் அடித் தளம் ஊமைக்கண்ணீர் வடிக் கும் வாழ்க்கையில் தனிமர மாகிவிட்ட எண்ணம் உருவா கும் அற்பவிடயத்திற்குக்கூட ஆத்திரப்படுவீர் பொறுமை வேண்டும்.

மகரம்— பொருளாதாரத் துறையில் நல்ல முன்னேற்றம் காணப்படுகின்றது கொடுக் கல் வாங்கல்மூலம் ஆதாயத் திற்கு இடமுண்டு வசீகரப் பேச்சின் காரணமாக எதிரி களையும் உங்கள் வசப்படுத்து வீர்கள்.

கும்பம்— இனம் தெரியாத வேதனை ஒன்றுால் நாள் முழுவ தும் தாக்கப்படுவீர்கள் வாழ்க் கையில் நிம்மதியற்ற நிலை உருவாகும் காதலர் கலங்கப் படுவார்கள் விட்டுக்கொடுக் கும் மனப்பான்மை நன்று.

மீனம்— அறிவாற்றலை வளர் ப்பதற்கு ஆக்கபூர்வமான நட வடிக்கை எடுப்பீர்கள் புலவர் கள் போற்றப்படுவார்கள் புதிய வாகனம் கொள்வனவு செய்வதில் சிலர் ஈடுபடுவார் கள் நல்லநாள்.

சோதிடக் கலாநிதி
திருமதி
க. வேலுப்பிள்ளை

## வன்செயலுக்கு நல்லை ஆதீனமும் இலக்கானது!

[யாழ்ப்பாணம்]

சத்திரமடத்தில் நடை பெற்ற வன்முறைச் சம்பவத் தின் போது தீக்கிரையான நல்லை ஆதீனத்தின் ஒரு பகுதி யால் இரண்டாயிரம் ரூபா நஷ்டமேற்பட்டுள்ளதாக முறையிடப்பட்டுள்ளது.

சமூகசேவைத் திணைக்களத் தினரால் சேகரிக்கப்பட்ட நஷ்டஈடு விபரங்களின் போது நல்லூர் ஆதீனமும் தனக்கு ஏற்பட்ட நஷ்டத் துக்கு நஷ்டஈடுகோரியுள்ளது.


## பணம் வேண்டுமா?

உங்கள் காணிகள், வீடுகள், நகைகள், வாகனங் களைப் பொறுப்பாக வைத்து பணத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள் இப்பொருட்களின் விலைகள் அதிகரிக் கும் இவ்வேளையில் பண நெருக்கடி நேரிடும்போது எம் மைச் சந்தித்து வேண்டிய பணத்தை பெற்றுக்கொள் ளுங்கள். மாதாமாதம் குறிப்பிடப்பட்ட பணத்தைச் செலுத்தி குறித்த தவணையில் மீளப்பெற்றுக்கொள் ளுங்கள்.

த பிறெண்ஸ் கம்பனி லிமிட்டெட்,
249, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம். தொலைபேசி: 23680



## புதுமனை புகுவிழா

எம்மால் புதிதாக அமைக்கப்பெற்ற

''பிரேமானந்தா''

எனும் இல்லத்தில் குடிபுகும் விழாநிகழும் வைகாசி மாதம் 18-ம் திகதி (01-6-1983) புதன்கிழமை பிற்பகல் 4-30 மணிக்கும் 5 மணிக்குமிடையிலுள்ள சுபநேரத்தில் நடைபெறும்.

தனிப்பட்ட அழைப்பிதழ்கள் வழங்கப்படவில்லை.




ஆதலால் உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை அழைப்பிதழாக ஏற்று இவ்விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

சி. வீ. கே. சிவஞானமும்
(யாழ். மாநகரசபை ஆணையாளர்)
திருமதி சரோஜினிதேவி சிவஞானமும்.

904/5, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
25-5-1983. (7391)



## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

1. அமரர் T. தேவசிகாமணி
(தலைவர் — ஜெப்ரே டெக்ஸ்டைல் மில்ஸ் நிர்வாக இயக்குநர் — டாட்டா இன்டஸ் ரீஸ் பங்காளர்—S. S. K ஹாஜா அலாவுதீன் அன் சன்ஸ் முன்னாள் நிர்வாக இயக்கு னர்—மிட்டரி கார்மென்ட்ஸ் F. T. Z. முன்னாள் அதிகாரி—வனபரிபாலன இலாகா, கட்டுநாயக்கா)

2. செல்வன் T அசோக்குமார்
(இந்துக்கல்லூரி, பம்பலப்பிட்டி)

3. செல்வி சுகுணா தேவசிகாமணி
(சென் பிரிட்ஜெட் கொன்வென்ற், கொழும்பு-7)

எல்லோருக்கும் இனியோராய், பண்பின் ஒளிச்சுடராய், அன்பின் திருவுருவாய் விளங்கி இன்று எங்களை ஆருத்துயரில் ஆழ்த்திவிட்டு, இறைவனடி சேர்ந்த அன்புத் தெய்வங்களே! உங்கள் மூவரினதும் ஆத்மா சாந்தி அடைய இறைவனை பிரார்த்திக் கிறோம்.

எங்கள் அன்புத் தெய்வங்களின் ஈமக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும், அனுதாபச்செய்திகள் அனுப்பியும், மலர்வளையங்கள் சாத்தியும், இன்னும் இன்னோ ரன்ன உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள், அதிகாரிகள், நிறுவன ஊழி யர்கள், கொழும்பு இந்துக்கல்லூரி, சென் பிரிட்ஜெட் கல்லூரி, வெள்ளவத்தை மகளிர்கல் லூரி, ஆசிரிய, ஆசிரியைமார், மாணவ மாணவிகள், அஞ்சலியுடல்கள், இரங்கற்பாக் கள் வெளியிட்ட கல்லூரி விளையாட்டுக்கழகங்கள், நாடக மன்றங்கள், மற்றும் பல வகைகளில் உதவிகள் புரிந்த வர்த்தகப் பெருமக்களுக்கும் ஜனாப் முகம்மது இப்றாகிம் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றி உரித்தாகுக.

எங்கள் அன்புத்தெய்வங்கள் மூவரும் இறைவன் திருவடி சேர்ந்ததையிட்டு 31-05-83 செவ்வாய்க்கிழமை காலை ஊறணி தீர்த்தக்கரையில் கரும கிருத்தியங்களும், எமது வல்வை இல்லத்தில் சபிண்டி கிரியைகளும் நடைபெறும். அத்தருணம் உற்றார் உறவினர் நண்பர்கள், பங்காளிகள் யாவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

இப்பேரிழப்பால் இரத்தக்கண்ணீர் வடிக்கும்

1. திருமதி சரோஜினிதேவி தேவசிகாமணி (மனைவி) 2. ராஜ்குமார் (புதல்வன்) 3. சுரேந்திரகுமார் (புதல்வன்), 4 அரவிந்தகுமார் (புதல்வன்), 5. ரேணுகா (புதல்வி) மற்றும் நெருங்கிய உறவினர்,

1. ''நடராஜகோட்டம்'' வல்வெட்டித்துறை.
2. No 1. ரொட்டுண்டா கார்டன்ஸ், கொழும்பு-3. (7382)



றீகல் (யாழ். நகர்)
2-6-83 கடைசி தினம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - சுமித்திரா
சங்கிலி

ராஜா (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர்-ஜெய்சித்ரா
உங்கள் விருப்பம்
(புதிய பிரதி)

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 4-15 7-00
சனி, ஞாயிறு 1-30
எம்.ஜி.ஆர். சரோஜாதேவி
எங்கவீட்டுப்பிள்ளை

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
M.G.R.—சரோஜாதேவி
தாயைக்காத்த
தனயன்
புதிய பிரதி

வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
எம்.ஜி.ஆர்— சரோஜாதேவி
அன்பே வா

லிடோ (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ராமராவ்
சம்பூர்ண
ராமாயணம்

சாந்தி - (யாழ். நகர்) 3-வது வாரம்
10-30, 2-30, 6-30, 9-45
தியாகம்
சிவாஜி, லட்சுமி, மேஜர், தேங்காய், நாகேஷ் மனோரமா
ஈஸ்ட்மென் கலர்
வி. கே. ராமசாமி

மனோகரா தினசரி 4 காட்சிகள்
(யாழ். நகர்)
கமலஹாசன், ஜெய்சங்கர், ஸ்ரீதேவி
வாழ்வே மாயம் (ஈஸ்ட்மன் கலர்)

ஸ்ரீதர் தினசரி 10-30, 2-00, 4-30, 7-00, 9-30
(யாழ். நகர்)
ROGER MOORE in
MOON RAKER
James Bond 007

ராணி தினசரி 10-30, 2-00, 6-00, 9-30,
(யாழ். நகர்)
கமலகாசன் - அம்பிகா
சகல கலா வல்லவன்

இரு தினங்கள் மட்டும்
வின்ஸர் தினசரி 5 காட்சிகள்
(யாழ். நகர்)
சர்ப்ப தேவதைகளும் அவற்றின்
இராச்சியம் பற்றிய ஒப்பற்ற கதை
SNAKE QUEEN
From 1-6-83 IDEAL MARRIAGE
(Adults Only)

“மட்டக்களப்பு மக்கள்

# தமிழீழ லட்சியத்திலிருந்து சிறிதும் விலகவில்லை”

## ‘தேர்தல் வெற்றிபற்றி முதல்வர்’

[மட்டக்களப்பு]

“மட்டக்களப்பு மாநகர சபைத் தேர்தலில் கூட்டணிக்குக் கிடைத்த வெற்றி மட்டக்களப்பு மக்கள் தமிழீழ இலட்சியத்திலிருந்து சிறிதும் விலகவில்லை என்பதை மேலும் உறுதிப்படுத்தி நிற்கின்றது.”

இவ்வாறு மட்டக்களப்பு மாநகரசபைத் தேர்தலில் த. வி. கூட்டணியின் சார்பில் போட்டியிட்டு முதல்வராகத் தெரிவு செய்யப்பட்ட திரு. இ. செம்பலவாணர் மட்டக்களப்பு மக்கள் அளித்த ஆதரவுக்கு நன்றிதெரிவித்து உரைநிகழ்த்தியபோது குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது: “மட்டக்களப்புத் தொகுதியில் கூட்டணியின் சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்றவர்கள் மாற்றுக்கட்சிக்கு மாறிச் சென்றாலும் மக்கள் தமிழீழ லட்சியத்திலிருந்து மாறவில்லை என்பதை இத்தேர்தல் தெட்டத் தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறது.

“மட்டக்களப்பு மக்கள் ஆசை வார்த்தைகளுக்கோ அதிகார வெறிகளுக்கோ அடிபணிந்து போகமாட்டார்கள் என்பதை எடுத்துக்காட்டிவிட்டார்கள். பல இன்னல்கள், துன்பங்களின் மத்தியிலும் தமிழீழ விடுதலை உணர்வோடு வாக்களித்த அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

“பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் சிறையில் சொல்லொண்ணாத் துன்பங்கள் அனுபவித்து கொண்டிருக்கும் தமிழ் இளைஞர்கள், விரிவுரையாளர்கள், வைத்தியர்கள், மதகுருமார்கள் மற்றும் தமிழீழ விடுதலைப் போராளிகள் அனைவருக்கும் இத் தேர்தல் முடிவுகள் சமர்ப்பணமாகும்.”

# இப்படியும் நடக்கிறது

கொழும்பு - காங்கேசன்துறை “இன்ரர் சிற்றி” ரயில் கொழும்பிலிருந்து காங்கேசன்துறைக்குப் புறப்பட்டால் அநுராதபுரம், யாழ்ப்பாணம் ஆகிய இரண்டு ரயில் நிலையங்களில் மட்டுமே தரித்துச்செல்லும்.

ஆனால் இந்த ரயிலை வேறுசில ரயில் நிலையங்களிலும் நிறுத்திச் செல்ல இப்பொழுது முயற்சி நடக்கிறதா?

இரண்டு தினங்களுக்கு முன்னர் இந்த ரயில் சாவகச்சேரியில் தரித்துச்சென்றது ஒரு பரீட்சார்த்த ஏற்பாடா என்று இப்பொழுது கேட்கப்படுகிறது. காரணம்—

கடந்த சனிக்கிழமை மேற்படி ரயில் சாவகச்சேரி ரயில் நிலையத்தில் நிறுத்தப்பட்டது. அவசரம்அவசரமாக ஒரு பெண் ரயிலிலிருந்து இறங்கினர். அவர் இறங்கியவுடன் ரயிலும் அவசரம்அவசரமாக மேடையை விட்டுப் புறப்பட்டுவிட்டது!

‘ஊடுருவி’

## மல்லாகம் மர்ம மரணம்

# சந்தேக நபருக்கு தொடர்ந்து றிமாண்ட்

(மாவிட்டபுரம்)

மல்லாகத்தில் இடம்பெற்ற மர்மமரணம் தொடர்பாக கைதாகி றிமாண்டில் வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர் தொடர்ந்து ஜூன் 7-ம் திகதி வரை றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார்.

மல்லாகத்தைச் சேர்ந்த 3 பிள்ளைகளுக்குத் தந்தையான கையலங்கார தொழிலாளி பைரவி பரஞ்சோதி என்பவர் மர்மமான முறையில் மரணமடைந்து அவரது மரணம் தொடர்பாக நடத்தப்பட்ட மரணவிசாரணையில் தற்கொலை என தீர்ப்பளிக்கப்பட்டிருந்த போதும் இது ஓர் கொலையாக இருக்கலாமென இறந்தவரின் தாயார் பைரவி பார்வதி சந்தேகமொன்றை எழுப்பி இச்சம்பவம் பற்றி மீளாய்வு செய்யுமாறு கோரியிருந்தார்.

இதற்கமைய மல்லாகம் நீதிபதி திரு. சி. வி. விக்னேஸ்வரன் புதைக்கப்பட்ட மேற்படி நபரின் சடலத்தை தோண்டி எடுத்து சட்டவைத்திய அதிகாரியின் பரிசோதனைக்குட்படுத்துமாறும், இது குறித்து கைதான இறந்தவரின் மைத்துனரான செல்லத்துரை நடராசாவை றிமாண்டில் வைக்குமாறும் உத்தரவிட்டிருந்தார்.

இதற்கமைய சடலம் தோண்டப்பட்டு சட்டவைத்திய அதிகாரியினால் பரிசோதனை செய்யப்பட்டது.

இந்த விவகாரம் மீண்டும் மல்லாகம் நீதிமன்றத்தில் எடுக்கப்பட்டபோது, தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் சடலத்தை ஏற்கனவே பரிசோதித்திருந்த வைத்திய அதிகாரி திரு. டி. ஞானசுந்தரம் தமது வைத்திய அறிக்கையை சமர்ப்பித்திருந்தார். சட்ட வைத்தியஅதிகாரியின் அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை.

றிமாண்டில் வைக்கப்பட்டிருக்கும் சந்தேகநபர் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் ஆர். ஈ. தம்பிரத்தினம், ரி. தம்பிரத்தினம் ஆகியோர் சந்தேக நபரை பிணையில் விடுமாறு கோரினர்.

தெல்லிப்பழை வைத்திய அதிகாரி தமது அறிக்கையில் காலமானவரின் உடலில் வெளிகாயங்கள் இருப்பதாக தெரிவித்துள்ளார். இருந்தபோதும் சுருக்கிட்டு தற்கொலை செய்து கொண்டிருக்கலாம் என்றே அவர் கூறியிருக்கிறார். சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கை இன்னமும் கிடைக்கவில்லை. மரணத்திற்கு காரணம் என்ன என்பதை அவரது அறிக்கையிலிருந்து அறிய முடியும். ஆகவே சந்தேகநபரை தொடர்ந்து ஜூன் மாதம் 7-ம் திகதிவரை றிமாண்டில் வைத்து சட்டவைத்திய அதிகாரியின் அறிக்கை கிடைத்ததும் மரணத்திற்கான காரணத்தை அறிந்து மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கலாம் என நீதிபதி சி. வி. விக்னேஸ்வரன் அறிவித்தார்.

இறந்தவரின் நலனைக் கவனிக்க சட்டத்தரணிகள் ஆர். ஜே. செல்வரத்தினம், மனோ. ஸ்ரீதரன், திருமதி கமலா சொர்ணலிங்கம் ஆகியோர் சுன்னாகம் பொலிஸ் சார்ஜன்ட் திரு. சிவலிங்கத்தின் உதவியுடன் ஆஜராகினர். (க)

“தமிழ்மக்களின் போராட்டத்தில்

# இளைஞர்கள் ஓரணியில் திரளவேண்டும்”

## சமநீதி இயக்கம் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

“தமிழ்பேசும் மக்கள் இழந்த உரிமைகளைப்பெற்று மீண்டும் சுதந்திரப் பிரஜைகளாக ‘தலைநிமிர்ந்து வாழ தமிழ் இளைஞர்களும், யுவதிகளும் தமது கடமைகளைச் செய்ய முன்வரவேண்டும். தலைவர்களையும், அவர்களது சந்தர்ப்பவாத செயல்களையும், நிராகரித்துவிட்டு இளைஞர்கள் ஓரணியில் திரண்டு; தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தில்போது ஆக்கபூர்வமான பணிகளில் செயலாற்றவேண்டும்.

சமநீதி இயக்கப் பிரதம அமைப்பாளர் திரு. பி. கே. பாலசுப்பிரமணியம் வெள்ளவத்தை இல்வா மாவத்தையில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த “தமிழ் பேசும் மக்கள் எதிர்காலம்” என்ற தலைப்பிலான கருத்தரங்கில் கருத்து வழங்குகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு. பி. கே. பாலசுப்பிரமணியம் தொடர்ந்து உரையாற்றுகையில்: முற்போக்கு சோசலிச வாதமும் “தர்மிஷ்ட” ஆணுகுமுறையும் தமிழ்பேசும் மக்களின் உரிமைகளை அதிதீவிரமாக பறித்து வருகின்றது. 35 லட்சம் தமிழ் பேசும் மக்களில் 35 ஆயிரம் பேர்கூடத் தமது அபாயகரமான நிலையை உணராது அரசுக்கு ஆதரவுதேட முனைபவர்களை எண்ணி உண்மையாகவே உள்ளம் குமுறுமல் இருக்கவே முடியாது.

1948 ம் ஆண்டு தொட்டு இன்றுவரை மாறி மாறி ஆட்சிபீடம் ஏறிய சகல முதலாளித்துவ இனவெறி பிடித்த சகல அரசியல் கட்சிகளாலும் இந்நாட்டிலே வாழ்கின்ற அனைத்துத் தமிழ் பேசும் மக்களின் அடிப்படை உரிமைகளும் பறித்து சுயநிர்ணஉரிமை குழிதோண்டிப் புதைக்கப்பட்டு மொழித்துறையிலே; தொழில் வழங்கலிலே, கல்வித் துறையிலே, குடியேற்றத் திட்டங்களிலே குடியுரிமைப் பிரச்னைகளிலே தமிழ்பேசும் மக்கள் இன்று பலவிதமான அநீதிகளுக்கும் ஈழத்து அரசியலிலே என்றும் இல்லாதவாறு மிகவும் சிக்கலான சூழ்நிலையில்சுழன்று வரும் தமிழ்பேசும் மக்களின் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லக்கூடிய சரியான ஒரு புரட்சிகர அமைப்பையும், தலைமையையும் வேண்டியே தமிழினம் காத்து நிற்கிறது.”

திருவாளர்கள் ஏ. சாந்தகுமார், பி. அரவிந்தன் உட்பட சமநீதி மகளிர் அணி அமைப்பாளர் செல்வி கி. துஷ்யந்தி ஆகியோரும் உரையாற்றினர். (க)

# ரூபவாஹினியில் இன்று

மாலை

6-00 இன்றைய நிகழ்ச்சிகள்
6-01 சிறுவர் நிகழ்ச்சி [சிங்களம்]
6-30 ‘பிக்புளுமாபிள்’ சிறுவர் நிகழ்ச்சி [ஆங்கிலம்]
7-00 செய்தி மஞ்சரி [தமிழ்]
7-14 நாளைய நிகழ்ச்சிகள்
7-15 ‘டக்ராறி’ ஆபிரிக்க காட்டு வைத்தியசாலை ஒன்றை மையமாகக் கொண்ட சித்திரம் [ஆங்கிலம்]
8-15 செய்தி மஞ்சரி [சிங்களம்]
8-30 ‘டாக்டர் இன் த ஹவுஸ்’ ஆங்கில நகைச்சுவைச் சித்திரம்
9-00 சிங்கள நிகழ்ச்சி
9-30 செய்தி மஞ்சரி [ஆங்கிலம்]
9-45 துப்பறியும் தொடர் [ஆங்கிலம்]

# 10 நிமிடம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வந்தார்கள்.

‘7 மணிக்கு கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலை வாக்களிப்பு நிலையத்துக்குச் சென்றோம். 8 மணிக்கு வாக்களிப்பு ஆரம்பமானது. எங்களுடன் வந்த இராணுவ வீரர்களின் பெயர்கள் தெரியாது.

‘இராணுவ வீரர்களில் நால்வர், பாடசாலைக் கட்டிடத்தின் நான்கு மூலைகளிலும் கடமைபுரிந்தார், மற்ற இராணுவ வீரர் கண்காணித்துக் கொண்டிருந்தார்.

‘பொலிஸ் கான்ஸ்டபிள்களாகிய நாங்கள் வாக்குப் பெட்டிகளைப் பார்த்துக் கொண்டிருந்தோம். 15 நிமிடங்களுக்கொருதடவை பொலிஸாரும் இராணுவத்தினரும் ஜீப்பிலும், ரக்கிலும் ரோந்து சேவையில் வந்து-வந்துபோனார்கள். கடைசியாக 3-45 மணியளவில் பொலிஸ் ஜீப் வந்து போனது. 3-50-க்கு இராணுவத்தினர் வந்து போனார்கள். சில நிமிடங்களுக்குப் பின்னர் பாடசாலைக்கு முன்னுள்ள மாமரத்தின் கீழ் நின்றேன். காவலில் நின்ற எல்லோரும் ஆயுதங்கள் வைத்திருந்தார்கள். நான் றைபிள் வைத்திருந்தேன். இறந்த இராணுவ வீரர் பாடசாலையின் மேற்குப் பக்கமாக நின்றார். மற்ற இராணுவ வீரர் கிழக்குப் பக்கமாக நின்றார். அப்பொழுது எனது முதுகுப் பக்கமாக மேற்குத்திசையினூடாகத் துப்பாக்கிக் குண்டுகள் பாடசாலைச் சுவரில் படுவதை கண்டேன். அந்த நேரம் ‘டவுன்’ என்ற சத்தம் கேட்டது.

‘நான் திரும்பிப்பார்த்தேன் கிழக்குத்திசையில் நின்ற இராணுவவீரர் குனிந்தபடி பாடசாலைக்கு பின்னால் உள்ள கோவிலுக்கு ஆயுதத்துடன் ஓடி வந்ததைக் கண்டேன், இதைக் கண்டதும் நானும் அங்கு ஓடினேன். நான் ஓடிப் போகும் பொழுது எல்லாப் பக்கமும் வெடிச்சத்தம் கேட்டது.

‘அவ்வேளை பாடசாலைக்குள் இருந்தும் வெடிச்சத்தம்கேட்டது. நான் பின்பக்கமாக வுள்ள கோவிலுக்குள்ளிருந்து 5 வேட்டுகளை சத்தம் கேட்ட பக்கமாகத்தீர்த்தேன். தொடர்ந்து 10 நிமிடங்கள் வெடிச சத்தம் கேட்டன, நான் ஒருவரையும் காணவில்லை. பின்னர். மற்ற இரு இராணுவ வீரர்களுடன் சேர்ந்து பாடசாலைக்குள் வந்தேன், அங்கு இராணுவ வீரரும் பொலிஸ் கான்ஸ்டபிளும் தேர்தல் உத்தியோகத்தர்களும் நின்றார்கள், றோட்டுப் பக்கமாகவும் இராணுவ வீரர்களும் பொலிசாரும் நின்றார்கள்.

‘பாடசாலைக்கு முன்புறம் வந்தபொழுது மேற்குப் புறமாகக் கடமையிலிருந்த இராணுவ வீரர் இரத்தக் காயத்துடன், முனை வெளியில் வந்தபடி வேலிப் பக்கமாக இறந்து கிடக்கக் கண்டேன், அவர் கையில் வைத்திருந்த துப்பாக்கியைக் காணவில்லை. பின்னர் இச்சம்பவத்தையிட்டு விசாரணை செய்த புலன் விசாரணை பகுதி பொலிசாருக்கு சாட்சியமளித்தேன்.

‘இச்சம்பவத்தின் போது எங்களைத் தாக்கியவர்களால் வீசப்பட்ட எறிகுண்டுகள் போன்ற பொருள் மாமரத்தின் கீழ் இருக்கக் கண்டேன்’

மரணமான இராணுவ கோப்ரல் ஜெயவர்த்தனவின் உடலில் 3 துப்பாக்கிச்சூட்டுக் காயங்களும் கைக்குண்டு வீச்சால் ஏற்பட்ட இரு காயங்களும் காணப்பட்டதாகவும் துப்பாக்கியால் சுடப்பட்டு ஏற்பட்ட அதிர்ச்சியினாலும் இரத்தப்பெருக்காலும் அவர் மரணமானார் என்றும் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட பேராசிரியரும் பதில் சட்ட வைத்திய அதிகாரியுமான எஸ். சரவணபவானந்தன் தமது சாட்சியத்தில் தெரிவித்ததைத்தொடர்ந்து பதில் நீதவான் கொலை எனத்தீர்ப்பளித்து, தொடர்ந்துவிசாரணை நடத்துமாறு பொலிசாருக்கு உத்தரவிட்டார். (மா)

## யாழ். நகரில்

[3ம் பக்கத் தொடர்ச்சி]

சேவகர் பிரிவுகள் தோறும் பாலனையாளர் சங்கங்களும் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் தோறும் பாலனையாளர் சங்கங்களின் பிரதேச சபைகளும் தற்போது இயங்கி வருகின்றன.

பிரதேச சபைகளிலிருந்து அவை ஒரு பிரதிநிதியை தெரிவு செய்து யாழ் மாவட்ட பாலனையாளர் சங்கங்களின் சமாஜ அங்குரார்ப்பணக் கூட்டத்திற்கு அனுப்பிவைக்குமாறு பிரதேசசபைகளை யாழ். உள்நாட்டு உதவி வியாபார ஆணையாளர் திரு. த. மார்க்கண்டு கோரியுள்ளார்.

மேற்படி சமாஜ அங்குரார்ப்பணக் கூட்டம் ஜூன் 24-ம் திகதி நடைபெறுவுப்பதால் பிரதிநிதியைத் தெரிவுசெய்து ஜூன் 9 ம் திகதிக்கு முன் தமக்கு தெரியப்படுத்துமாறும் அவர் கோரியுள்ளார்.

உதைபந்தாட்டம்

# இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன், 25 வயதுக்குள் பட்டவர்களுக்கிடையில் நடாத்தப்படும் உதைபந்தாட்ட ‘நொக்கவுட்’ போட்டி இன்று யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் ஆரம்பமாகிறது. இறுதிப்போட்டி அடுத்தமாதம் 5-ம் திகதி நடைபெறும். (வி)

இப்பத்திரிகை “ஈழநாடு” லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1983-ம் ஆண்டு மே மாதம் 30-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Poat Office Sri Lanka. under nnmber B. 100236/81. Eelanadu-P. O. Box, 49, Telcgram: Eelanadu, Telephone: 22389 — 24126.